# நோயாளிக்குத தகவல்

## சிகிச்சை மருந்து:

# இருதய நோய்கள்

ஆன்ட்டிபிளாட்டிலெட் ஏஜண்ட்ஸ்

- ☐ ஆஸ்பிரின்
- ☐ டைப்பிரிடாமோல்
- ☐ தீனோப்பிரிடைன்



Medicine To Treat: **Cardiac Diseases**
**Antiplatelet Agents**

## உங்கள் மருத்துவர் பரிந்துரைத்துள்ள மருந்துகள்

| மருந்து | எதற்குப் பயன்படுத்தப்படுகிறது? | மற்ற பெயர்கள் |
|---|---|---|
| ஆஸ்பிரின் | இரத்தப் பிசுபிசுப்பைக் குறைக்கும் அதன் மூலம் இம்மருந்து பக்கவாதம் அல்லது மாரடைப்பு சாத்தியத்தைக் குறைக்கிறது. | கார்டிபிரின்*<br>டிஸ்பிரின் |
| டைப்பிரிடாமோல் | இரத்தப் பிசுபிசுப்பைக் குறைக்கும். பக்க வாதம் ஏற்படும் சாத்தியத்தைக் குறைக்க அடிக்கடி ஆஸ்பிரினுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது. | பெர்சான்ட்டின்* |
| தீனோப்பிரிடைன் வகைகள் | இரத்தப் பிசுபிசுப்பைக் குறைக்கும். மாரடைப்பைத் தடுக்க இதை மட்டும் தனியாக அல்லது ஆஸ்பிரினுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது. | டிக்லோபைடின் (டிக்லிட்)*<br>குளோப்பிடோகிரெல் (பிளாவிக்ஸ்)* |

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்வது?

வயிற்றுக் கோளாறு ஏற்படாமல் தடுக்க உணவுக்குப் பிறகு நீங்கள் இந்த மருந்தை உட்கொள்ள வேண்டும். உங்கள் மருத்துவரின் ஆலோசனையை முதலில் பெறாமல் இந்த மருந்தை நிறுத்திவிடாதீர்கள்.

மருந்தின் தயாரிப்பு முறையைப் பொறுத்து சில வகை ஆஸ்பிரின் மாத்திரைகளை நீங்கள் மென்று அல்லது சப்பி விழுங்க வேண்டும். மாத்திரையை மெல்லாமல் முழுதாக விழுங்கும்படி அல்லது தண்ணீர் குவளையில் கரைத்து உட்கொள்ளும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படலாம். ஆஸ்பிரின் மாத்திரையை உட்கொள்ளும் சரியான வழிமுறை உங்களுக்குத் தெரியாவிட்டால் உங்கள் மருந்தாளுநரிடம் ஆலோசனை பெறுங்கள்.

### ஒருவேளை மருந்தை நான் உட்கொள்ள மறந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

கூடியவரை தவறவிடாதீர்கள். ஒருவேளை மருந்தை மறந்துவிட்டால், நினைவுக்கு வந்ததும் இயன்ற விரைவில் அந்த வேளைக்குரியதை உட்கொண்டுவிடுங்கள். எனினும், அடுத்த மருந்து வேளை நெருங்கிவிட்டால் தவற விட்ட மருந்தை உட்கொள்ள வேண்டாம். அதற்காக, அடுத்த வேளையில் அதையும் சேர்த்து இருமடங்கு மருந்தை உட்கொள்ளாதீர்கள்.

*குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்திருங்கள்*

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்கவிளைவுகள் யாவை?

| மருந்து | சாத்தியமான பக்கவிளைவுகள் |
|---|---|
| ஆஸ்பிரின் | • ஒவ்வாமை விளைவுகள் (தும்மல், சுவாச அடைப்புகள், தொண்டை வீக்கம், மூச்சுத் திணறல், சிரங்கு அல்லது தோல் சொறி).<br>• குமட்டல், அஜீரணம், வயிற்றில் எரிச்சல். குடல் பாதுகாக்கும் பொருள் பூசப்பட்ட மாத்திரைகள் அல்லது வயிற்றுப் பாதுகாப்பு மாத்திரைகளுடன் ஆஸ்பிரினைச் சேர்த்து உட்கொள்வதால் இவற்றைக் குறைக்கலாம்.<br>• வழக்கத்திற்கு மாறான இரத்தக்கசிவு அல்லது சிராய்ப்பு, காது இரைச்சல், அல்லது சிறுநீரில் இரத்தம். |
| டைப்பிரிடாமோல் | • தலைசுற்றல் அல்லது தலைவலி<br>• அஜீரணம் மற்றும் வயிற்றுத் தொந்தரவு<br>• சொறிகள் |
| தீனோப்பிரிடைன் | • வயிற்றில் எரிச்சல்<br>• வயிற்றுப் போக்கு<br>• சொறிகள்<br>• இரத்த வெள்ளை அணுக்கள் குறைதல் அல்லது பிளேட்லெட் எண்ணிக்கை குறைதல். நீங்கள் டிக்லோபிடைன் உட்கொண்டு வந்தால் உங்கள் மருத்துவரிடம் வழக்கமாக இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். |

உங்கள் மருந்தை உட்கொண்டு வரும்போது வழக்கத்திற்கு மாறான பக்கவிளைவு எதையும் உணர்ந்தால் அன்புகூர்ந்து உங்கள் மருத்துவரிடம் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

நீங்கள் கருவுற்றிருந்தால் அல்லது கருவுறத் திட்டமிட்டிருந்தால் அல்லது தாய்ப்பால் ஊட்டிக் கொண்டிருந்தால் உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

நீங்கள் மற்ற மருந்து (பரிந்துரைக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட), ஊட்டச் சத்து மருந்து அல்லது மூலிகை மருந்து போன்றவற்றை உட்கொள்வதற்குமுன் உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளுநரின் ஆலோசனையைப் பெற வேண்டும். அவற்றின் சில மருந்துக் கூறுகள் உங்கள் மருந்துடன் கலந்து பாதிப்பை ஏற்படுத்தலாம்.

நீங்கள் பல் மருத்துவம் உள்ளிட்ட அறுவை சிகிச்சைக்குச் செல்ல வேண்டியிருந்தால் அதிக இரத்த இழப்பைத் தடுக்கும் வகையில் மருந்தை நிறுத்தி வைப்பது குறித்து அன்புகூர்ந்து உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்துகளை நான் சேமித்து வைப்பது எப்படி?

உங்கள் மருந்துகளை அதன் கலத்தில் இறுக மூடி வைத்திருக்க வேண்டும். அவற்றை வெப்பமும் சூரிய வெளிச்சமும் தாக்காத குளிர்ச்சியான உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள்.

SingHealth · Ministry Of Health · National Healthcare Group

Printed in 2002